جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

1

وَاتَّبِعْ مَا يُوْحٰۤى اِلَيْكَ وَاصْبِرْ حَتّٰى يَحْكُمَ اللّٰهُ ۖۚ وَهُوَ خَيْرُ الْحٰكِمِيْنَ

(நபியே!) உங்களுக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதையே பின்பற்றி நடந்து கொள்வீராக! அல்லாஹ் தீர்ப்பளிக்கும் வரையில் பொறுமையாகவும், உறுதியாகவும் இருப்பீராக! அவனே தீர்ப்பளிப்பவர்களில் மிகவும் மேலானவன்.

அல்குர்ஆன் 10:109

## நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

2

وَاصْبِرْ فَإِنَّ اللّٰهَ لَا يُضِيْعُ اَجْرَ الْمُحْسِنِيْنَ

(நபியே! எந்நிலையிலும்) பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! நிச்சயமாக அல்லாஹ் அழகிய செயல்கள் செய்வோரின் கூலியை வீணாக்கி விடமாட்டான்.

அல்குர்ஆன் 11:115

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

3

وَاصْبِرْ وَمَا صَبْرُكَ إِلَّا بِاللَّهِ وَلَا تَحْزَنْ
عَلَيْهِمْ وَلَا تَكُ فِي ضَيْقٍ مِّمَّا يَمْكُرُونَ

(நபியே!) இன்னும் நீர் பொறுமையுடன் இருப்பீராக! எனினும் அல்லாஹ்வின் உதவியில்லாமல் நீர் பொறுமையுடனே இருக்க முடியாது - அவர்களுக்காக நீர் (எது பற்றியும்) கவலைப்பட வேண்டாம் - அவர்கள் செய்யும் சூழ்ச்சிகளை பற்றி நீர் (மன) நெருக்கடியில் ஆகிவிடவேண்டாம்.

அல்குர்ஆன் 16:127

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

4

وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدٰوةِ وَالْعَشِيِّ يُرِيْدُوْنَ
وَجْهَهٗ وَلَا تَعْدُ عَيْنٰكَ عَنْهُمْ ۚ تُرِيْدُ زِيْنَةَ الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَلَا تُطِعْ
مَنْ اَغْفَلْنَا قَلْبَهٗ عَنْ ذِكْرِنَا وَاتَّبَعَ هَوٰٮهُ وَكَانَ اَمْرُهٗ فُرُطًا

(நபியே!) எவர் தம் இறைவனுடைய திருப்பொருத்தத்தை நாடியவர்களாக காலையிலும், மாலையிலும் அவனைப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுடன் நீரும் பொறுமையை மேற் கொண்டிருப்பீராக! இன்னும் உலக வாழ்க்கையின் அலங்காரத்தை நாடி அ(த்தகைய)வர்களை விட்டும் உம் இரு கண்களையும் திருப்பி விடாதீர், இன்னும், எவனுடைய இதயத்தை நம்மை நினைவு கூர்வதிலிருந்து நாம் திருப்பி விட்டோமோ அவனை நீர் வழிபடாதீர், ஏனெனில் அவன்தன் இச்சையைப் பின்பற்றியதனால் அவனுடைய காரியம் வரம்பு மீறியதாகி விட்டது.

அல்குர்ஆன் 18:28

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

5

وَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ فَإِنَّكَ بِأَعْيُنِنَا وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ حِينَ تَقُومُ

எனவே (நபியே!) உம்முடைய இறைவனின் தீர்ப்புக்காகப் பொறுத்திருப்பீராக! நிச்சயமாக நீர் நம் கண்காணிப்பில் இருக்கின்றீர், மேலும் நீங்கள் எழுந்திருக்கும் சமயத்தில் உம் இறைவனின் புகழைக் கூறித் தஸ்பீஹு செய்வீராக!

அல்குர்ஆன் 52:48

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

6

وَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَاهْجُرْهُمْ هَجْرًا جَمِيْلًا

அன்றியும், அவர்கள் (உமக்கெதிராகக்) கூறுவதைப் பொறுத்துக் கொள்வீராக! மேலும், அழகான கண்ணியமான - முறையில் அவர்களை விட்டும் வெறுத்து ஒதுங்கி விடுவீராக!.

அல்குர்ஆன் 73:10

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

7

تِلْكَ مِنْ اَنْۢبَآءِ الْغَيْبِ نُوْحِيْهَاۤ اِلَيْكَ‌ۚ مَا كُنْتَ تَعْلَمُهَاۤ اَنْتَ وَلَا قَوْمُكَ مِنْ قَبْلِ هٰذَا‌ ۛؕ فَاصْبِرْ‌ ۛؕ اِنَّ الْعَاقِبَةَ لِلْمُتَّقِيْنَ

(நபியே! உமக்கு) இது மறைவான நிகழ்ச்சிகளில் உள்ளதாகும், நாம் இதனை உமக்கு (வஹீ மூலம்) அறிவித்தோம், நீரோ அல்லது உம்முடைய கூட்டத்தினரோ இதற்கு முன் இதனை அறிந்திருக்கவில்லை, நீரும் பொறுமையைக் கைக்கொள்வீராக! நிச்சயமாக இறுதியில் (நல்ல) முடிவு பயபக்தி உடையவர்களுக்குத் தான்.

அல்குர்ஆன் 11:49

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

8

فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ
طُلُوْعِ الشَّمْسِ وَقَبْلَ غُرُوْبِهَا ۚ
وَمِنْ اٰنَآئِ الَّيْلِ فَسَبِّحْ وَاَطْرَافَ النَّهَارِ لَعَلَّكَ تَرْضٰى

ஆகவே (நபியே!) அவர்கள் சொல்வதை(யெல்லாம்) நீர் பொறுத்துக் கொள்வீராக! இன்னும் சூரியன் உதிப்பதற்கு முன்னும், அது அடைவதற்கு முன்னும், இரவின் நேரங்களிலும் உம்முடைய இறைவனின் புகழைத் துதித்துத் தொழுவீராக! மேலும் இன்னும் பகலின் (இரு) முனைகளிலும் இவ்வாறே துதி செய்து தொழுவீராக! இதனால் (நன்மைகளடைந்து) நீர் திருப்தி பெறலாம்.

அல்குர்ஆன் 20:130

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

9

فَاصْبِرْ إِنَّ وَعْدَ اللَّهِ حَقٌّ وَلَا يَسْتَخِفَّنَّكَ الَّذِينَ
لَا يُوقِنُونَ

ஆயினும், (நபியே!) நீர்!
பொறுமையுடன் இருப்பீராக,
நிச்சயமாக அல்லாஹ்வின்
வாக்குறுதி உண்மையானதாகும்,
ஆகவே, உறுதியான நம்பிக்கை
இல்லாத இவர்கள் உம்மைக்
கலக்கமடையச் செய்ய வேண்டாம்.

அல்குர்ஆன் 30:60

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

10

فَاصْبِرْ إِنَّ وَعْدَ اللَّهِ حَقٌّ وَاسْتَغْفِرْ لِذَنْبِكَ
وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ بِالْعَشِيِّ وَالْإِبْكَارِ

ஆகவே, நீர் பொறுமையுடன் இருப்பீராக! நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உறுதியுடையதாகும். உம் பாவத்திற்காக மன்னிப்புக் கோருவீராக! மாலையிலும் காலையிலும் உம் இறைவனைப் புகழ்ந்து, தஸ்பீஹு (துதி) செய்து கொண்டு இருப்பீராக!

அல்குர்ஆன் 40:55

## நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

11

فَاصْبِرْ إِنَّ وَعْدَ اللَّهِ حَقٌّ ۚ فَإِمَّا نُرِيَنَّكَ بَعْضَ الَّذِي نَعِدُهُمْ أَوْ نَتَوَفَّيَنَّكَ فَإِلَيْنَا يُرْجَعُونَ

ஆகவே, (நபியே!) நீர் பொறுமையுடன் இருப்பீராக, நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சிலவற்றை, நாம் உமக்குக் காண்பித்தாலும் அல்லது அதற்கு முன்னரே நிச்சயமாக நாம் உம்மை மரணமடையச் செய்தாலும், அவர்கள் நம்மிடமே கொண்டுவரப்படுவார்கள்.

அல்குர்ஆன் 40:77

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

12

فَاصْبِرْ كَمَا صَبَرَ اُولُوا الْعَزْمِ مِنَ الرُّسُلِ وَلَا تَسْتَعْجِلْ لَّهُمْ ؕ كَاَنَّهُمْ يَوْمَ يَرَوْنَ مَا يُوْعَدُوْنَ ۙ لَمْ يَلْبَثُوْۤا اِلَّا سَاعَةً مِّنْ نَّهَارٍ ؕ بَلٰغٌ ۚ فَهَلْ يُهْلَكُ اِلَّا الْقَوْمُ الْفٰسِقُوْنَ

"(நபியே!) நம் தூதர்களில் திடசித்தமுடையவர்கள் பொறுமையாக இருந்தது போல், நீரும் பொறுமையுடன் இருப்பீராக! இவர்களுக்காக (வேதனையை வரவழைக்க) அவசரப்படாதீர்! இவர்களுக்கு வாக்களிக்கப்பட்டதை இவர்கள் பார்க்கும் நாளில், அவர்கள் (இப்பூமியில்) ஒரு நாளில் ஒரு நாழிகைக்கு மேல் இருக்கவில்லை (என்று எண்ணுவார்கள். இது) தெளிவாக அறிவிக்க வேண்டியதே! எனவே, வரம்பு மீறியவர்கள் தவிர (வேறு எவரும்) அழிக்கப்படுவார்களா?

அல்குர்ஆன் 46:35

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

13

فَاصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَسَبِّحْ بِحَمْدِ رَبِّكَ قَبْلَ طُلُوْعِ الشَّمْسِ وَقَبْلَ الْغُرُوْبِ

எனவே (நபியே!) அவர்கள் கூறுவதைப் பற்றிப் பொறுமையோடிருப்பீராக! இன்னும், சூரிய உதயத்திற்கு முன்னரும், (அது) அஸ்தமிப்பதற்கு முன்னரும் உம்முடைய இறைவனின் புகழைக் கொண்டு நீர் தஸ்பீஹு செய்வீராக!

அல்குர்ஆன் 50:39

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

14

فَٱصْبِرْ لِحُكْمِ رَبِّكَ وَلَا تَكُن كَصَاحِبِ ٱلْحُوتِ إِذْ نَادَىٰ وَهُوَ مَكْظُومٌ

(நபியே!) உமது இறைவனின் கட்டளைக்காகப் பொறுத்திருப்பீராக. (கோபம் தாங்காது) மீன் வயிற்றில் சென்றவரை (யூனுஸை)ப் போல் நீரும் ஆகிவிடவேண்டாம். அவர் கோபத்தில் மூழ்கிச் சென்று (மீனால் விழுங்கப்பட்டு அதன் வயிற்றில் இருந்துகொண்டு இறைவனைப்) பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததை நினைத்துப் பார்ப்பீராக!

அல்குர்ஆன் 68:48

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

15

اِصْبِرْ عَلٰى مَا يَقُوْلُوْنَ وَاذْكُرْ عَبْدَنَا دَاوٗدَ ذَا الْاَيْدِ ۚ اِنَّهٗۤ اَوَّابٌ

இவர்கள் கூறுவதைப்பற்றிப் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், வல்லமையுள்ள நம் அடியார் தாவூதையும் நினைவு கொள்வீராக! நிச்சயமாக அவர் (எந்நிலையிலும் நம்மையே) நோக்குபவராக இருந்தார்.

அல்குர்ஆன் 38:17

# وَلِرَبِّكَ فَاصْبِرْ

## இன்னும், உம் இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக!

அல்குர்ஆன் 74:7

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

17

فَاصْبِرْ لِحُكْمِ رَبِّكَ وَلَا تُطِعْ مِنْهُمْ اٰثِمًا اَوْ كَفُوْرًا

ஆகவே, உம்முடைய இறைவனின் கட்டளைக்காகப் பொறுமையுடன் (எதிர்பார்த்து) இருப்பீராக! அன்றியும், அவர்களில் நின்று எந்தப் பாவிக்கோ அல்லது நன்றியற்றவனுக்கோ நீர் வழிபடாதீர்.

அல்குர்ஆன் 76:24

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

18

فَاصْبِرْ صَبْرًا جَمِيْلًا ۝٥
اِنَّهُمْ يَرَوْنَهٗ بَعِيْدًا ۝٦
وَّنَرٰىهُ قَرِيْبًا ۝٧

எனவே நீர் அழகிய பொறுமையுடன் பொறுப்பீராக! நிச்சயமாக அவர்கள் அதை (மறுமையை) வெகுதூரமாகக் காண்கின்றனர்.ஆனால், நாமோ அதனை வெகு சமீபமாகக் காண்கிறோம்.

அல்குர்ஆன் 70:5-7

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

19

رَبُّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَيْنَهُمَا فَاعْبُدْهُ وَاصْطَبِرْ لِعِبَادَتِهٖ ؕ هَلْ تَعْلَمُ لَهٗ سَمِيًّا

"(அவனே) வானங்களுக்கும், பூமிக்கும், அவை இரண்டிற்குமிடையே உள்ள வற்றிற்கும் இறைவனாக இருக்கின்றான். ஆகையினால் அவ(ன் ஒருவ)னையே வணங்குவீராக! மேலும், அவனை வணங்குவதில் (கஷ்டங்களையேற்றுப்) பொறுமையுடன் இருப்பீராக! (பெயரில், வல்லமையில், மற்றும் தன்மைகளில் அல்லாஹ்வுக்கு) நிகரானவனை நீர் அறிவீரா?"

அல்குர்ஆன் 19:65

# நபி (ﷺ) அவர்களுக்கு பொறுமையை மேற்கொள்வீராக என அல்லாஹ் கட்டளையிட்ட சந்தர்ப்பங்கள்

20

وَاْمُرْ اَهْلَكَ بِالصَّلٰوةِ وَاصْطَبِرْ عَلَيْهَا ؕ لَا نَسْـَٔلُكَ رِزْقًا ؕ نَحْنُ نَرْزُقُكَ ؕ وَالْعَاقِبَةُ لِلتَّقْوٰى

(நபியே!) உம் குடும்பத்தினரைத் தொழுது வருமாறு நீர் ஏவுவீராக! (தொழுகையின் மீது) நீர் பொறுமையும், உறுதியும் கொண்டிருப்பீராக! நாம் உம்மிடம் உணவு கேட்கவில்லை, ஆனால் உமக்கு உணவை நாம் கொடுக்கிறோம், இறுதியாகச் சிறந்த நிலை பயபக்தி(யுடையோரு)க்குத் தான்.

அல்குர்ஆன் 20:132